கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
மூன்றாம் வருட முதலாம் அரையாண்டு பொதுக் கலைமாணித் தேர்வு
2013 / 2014 (ஜனவரி - 2018)

# HY/S 3122 History of South Asia AD 1707 - 1970
# HY/S 3122 தென்னாசிய வரலாறு கி.பி 1707 - 1970

நேரம் : 02 மணித்தியாலங்கள்

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது. முதலாம் பகுதியிலிருந்து இரண்டு வினாக்களையும் இரண்டாம் பகுதியிலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையெழுதுக.

எழுத்துக்கள் தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படலாம்.

---

## பகுதி – I

01. சிப்பாய்களின் அதிருப்தியின் வெளிப்பாடே1857/58 ஆம் ஆண்டு இடம்பெற்ற சிப்பாய்க் கலகமாகும். இக்கூற்றினை ஆதாரமாகக் கொண்டு மேல்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக
(அ) சிப்பாய்க் கலகம் ஏற்படுவதற்கான காரணங்கள் (12 புள்ளிகள்)
(ஆ) சிப்பாய்க் கலகத்தினால் ஏற்பட்ட விளைவுகள் (13 புள்ளிகள்)

02. 19 ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் தோன்றிய சமய, சமூக, நிறுவனங்களின் உருவாக்கம், வளர்ச்சிப் போக்கு, பணிகள் தொடர்பில் மேல்வரும் தலைப்புக்களில் ஆராய்க.
(அ) ஆரிய சமாஜம் (12 புள்ளிகள்)
(ஆ) இராம கிருஷ்ணமிஷனும் சுவாமி விவேகானந்தரும் (13 புள்ளிகள்)

03. "இந்தியாவின் விடுதலையை நோக்காகக் கொண்டு உருவாக்கம் பெற்ற அமைப்பே இந்திய தேசிய காங்கிரஸ் அமைப்பாகும்" இக்கூற்றின் அடிப்படையில் மேல்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.
(அ) இந்திய தேசிய காங்கிரசின் உருவாக்கமும் அதன் நோக்கங்களும் (12 புள்ளிகள்)
(ஆ) காங்கிரசின் வளர்ச்சிப் போக்கு (13 புள்ளிகள்)

## பகுதி – II

04. இந்திய அரசியலமைப்பின் வளர்ச்சியில் 1935 ஆம் ஆண்டு அரசியல் திட்டம் பெறுகின்ற முக்கியத்துவத்தினை மதிப்பீடு செய்க. (25 புள்ளிகள்)

05. இந்திய சுதந்திரப் போராட்டத்தில் மகாத்மாகாந்தியின் வகிபங்கும் அவரது போராட்ட வடிவமும் குறித்து ஒரு கட்டுரை எழுதுக. (25 புள்ளிகள்)

06. தாய் நாடான இந்தியாவின் பல்லின சமூக ஒற்றுமையின்மையே பாக்கிஸ்தான், பங்களாதேஷ் நாடுகளின் பிரிவினைக்கு வழிவகுத்தது. இக்கூற்றினை அக்கால அரசியற் சூழ்நிலைகளை மையப்படுத்தி விபரிக்குக.

(25 புள்ளிகள்)